<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 133 /2023 நாள்: 18.02.2026 வா.சா.1 – காளியம்மாள்**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1,4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை -</u>**

1வது பிரதிவாதி எனது சகோதரர் என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகள் எனது உடன் பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். 4வது பிரதிவாதி சித்ரா, 1வது பிரதிவாதியின் மனைவி. தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. நான் படிக்கவில்லை. இந்த வழக்கில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் என்னை தாக்கியது சம்பந்தமாக நான் புகார் எதுவும் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை. நான் சொல்வது போல் என்னை தாக்கவும் இல்லை அப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. எனக்கு திருமணம் ஆகி 40 ஆண்டுகள் ஆகிறது. திருமணத்தின் போது எனது தகப்பனார் சீர்வரிசை செய்தார் என்றால் சரியல்ல. தகப்பனார் சீர்வரிசை செய்தார் என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது திருமணத்திற்கு பிறகு எனது கணவருடன் வசித்து வந்தேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் வீட்டிற்கும் எனது கணவர் வீட்டிற்கும் இடையே 20கி.மீ இருக்கும் என்று சொன்னால் சரிதான். நல்லது, கெட்டதுக்கு எனது தந்தை

வீட்டிற்கு வருவேன் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக பாகம் எப்போது ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. தற்போது அவர்கள் பாகம் செய்து கொண்ட விவரம் எனக்கு தெரியாமல் செய்துள்ளார்கள் என்று சாட்சி கூறுகிறார். பிரதிவாதிகள் எப்போது பாகம் செய்து கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது.

(பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN Digitally signed by M NAMBIRAJAN Date: 2026.02.18 17:59:14 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.